# கொங்கு நண்பர்கள் இதழ்

பதிவு எண். : 248/2012

திருவள்ளுவர் ஆண்டு 2042 (ஆடி–ஆவணி) ஆகஸ்ட் 2012 ஏர்-01, உழவு-08, விலை ரூ.10.00

பதிப்பாளர் :
கே.பாலசுப்பிரமணி
கொங்கு நண்பர்கள் இதழ்
ஆசிரியர் & பதிப்பாளர்
H-71, 5வது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை – 600 102.
செல் : 9383083073

அச்சகம் :
பிராம்ட் ஆப்செட் பிரிண்டர்ஸ்
நெ.49/37, வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

## இந்த இதழில்

| | | | |
|---|---|---|---|
| பொருளடக்கம் | - 1 | பாராளுமன்ற விழாவில் புறக்கணிப்பு | - 11 |
| தலையங்கம் | - 2 | தீரன்சின்னமலை நினைவு நாள் | - 15 |
| கட்டட நிதி | - 3 | குழந்தைகள் விழா | - 16 |
| வேண்டுகோள் | – 4 | விளையாட்டு விழா | - 17 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | – 5 | வாழ்த்துகிறோம் | - 19 |
| வாழ்த்துகிறோம் | – 6 | உணவே மருந்து | - 20 |
| வாழ்த்தி வணங்குகிறோம் | - 7 | மணமகள் தேவை | - 23 |
| பாராட்டுகிறோம் | - 9 | மணமகன் தேவை | - 26 |
| வருந்துகிறோம் | - 10 | மணமகள் தேவை | - 30 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / கொங்கு நண்பர்கள் இதழ் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு,



வணக்கம். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 50 ஆண்டுகளைக் கடந்து கொங்குச் சமுதாயப் பணியில் ஈடுபட்டு தொடர்ந்து சேவையாற்றி வருகிறது. ஒரு தன்னலமற்ற சமுதாயத் தொண்டு அமைப்பாகவும், அரசியல் கலப்பு சிறிதுமின்றி ஜனநாயக முறையில் இயங்கும் சீர்மிகு அமைப்பாகவும் விளங்குகின்ற சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இந்த ஆண்டு குடும்பவிழா, பொன்விழாவாக 02–09–2012 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை தேனாம்பேட்டையில் அமைந்துள்ள காமராஜர் அரங்கில் காலை 8 மணி முதல் மாலை வரை மிகவும் சிறப்பாகச் கொண்டாடப்பட உள்ளது. காலை 7.30 மணிக்கு காமராஜர் அரங்கத்திலேயே காலை உணவு வழங்கப்படும் எனக் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விழாவில் அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளி நாடுகளிலிருந்தும், கர்நாடகா, கேரளா போன்ற வெளி மாநிலங்களிலிருந்தும், கொங்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கொங்குச் சொந்தங்கள் வருகை தந்து கலந்து கொள்ள உள்ளனர்.

சங்க உறுப்பினர்கள் அனைவரும் குடும்பத்தோடும், சொந்தங்களோடும், குறிப்பாக குழந்தைகளோடும் இந்த வரலாற்று சிறப்புமிக்க பொன்விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என சங்கத்தின் சார்பில் அன்புடன் கேட்டுக்கொள்றேன். ஆடவர் கொங்குப் பாரம்பரிய உடையான வேஷ்டி சட்டையில் இந்த கவுண்டன்மார் விழாவிற்கு வந்தால் மிகவும் சிறப்பாக இருக்கும்.

விழாவிற்கான அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. ஏதாவது காரணத்தால் அழைப்பிதழ் கிடைக்கவில்லையென்றாலும் இந்த வேண்டுகோளையே அழைப்பிதழாகக் கருதி, பொன்விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு ‘ஆடி பதினெட்டு’ விழாவை காவிரியும் மற்ற ஆறுகளும் வறண்டு கிடந்ததால் உற்சாகமாகக் கொண்டாட முடியவில்லை. ஏற்கனவே, உற்பத்தியாகும் விவசாயப் பொருளுக்கு உரிய விலை இல்லாமை, விவசாயம் செய்ய ஆள் பற்றாக்குறை, தடங்கலற்ற மின்சாரம் கிடைக்காத நிலை போன்ற பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து உதவியும், நிவாரணமும் வழங்குவதோடு விவசாயிகளின் வேதனைகளையும் நஷ்டத்தையும் நீக்க வேண்டும் என சங்கத்தின் சார்பாக அரசுக்கு பணிவுடன் வேண்டுகோளை முன் வைக்கிறேன்.

கொங்கு நாட்டில் விவசாயம் செழிக்க மழை வேண்டி இறைனை கூட்டாகப் பிரார்த்தனை செய்வோம்.

சங்கம் மீண்டும் அழைக்கிறது, பொன்விழாவில் பங்கேற்றிட ! மறவாதீர் 02–09–2012 காலை 8 மணி தேனாம்பேட்டை, காமராஜர் அரங்கம். சங்கத்தை வளர்ப்போம் ! கொங்கு சமுதாயக் கடமை ஆற்றுவோம் !

நன்றி! வணக்கம்! பரணி கே. பாலசுப்பிரமணி

தலைவர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 72,23,936 |
| 1652 | 818 | R.மணியன் | 1000 |
| 1653 | 2218 | K.கோபால் | 1000 |
| 1654 | 2205 | K.S.நடராஜன் | 1000 |
| 1655 | | M.ராமசாமி | 1000 |
| 1656 | | P.கருப்பசாமி | 1000 |
| 1657 | | A.செல்வராஜ் | 1000 |
| 1658 | | சந்தானகோபாலகிருஷ்ணன் | 1000 |
| 1659 | 1723 | R.தேவராஜன் | 1000 |
| 1660 | 1990 | R.சுப்பிரமணியம் | 1000 |
| 1661 | 2000 | K.C.பிரபாகரன் | 1000 |
| 1662 | 2505 | Dr.S.லீலா | 1000 |
| 1663 | 347 | P.செல்வராஜ் | 1000 |
| 1664 | | அனுரூத் புருஷோத்தமன் | 1000 |
| 1665 | | A.R.ரவி பிரசாத் | 1000 |
| 1666 | 574 | K.செந்தில்குமார் | 1000 |
| 1667 | | J.மித்ரா | 1000 |
| 1668 | 51 | Dr.S.குமாரசாமி | 1000 |
| 1669 | 25 | A.N.சச்சிதானந்தன் | 1000 |
| 1670 | 133 | K.G.வெற்றிவேல் | 1000 |
| 1671 | 1926 | A.பரமசிவம் | 1000 |
| 1672 | 2781 | P.R.தங்கவேலு | 1000 |
| 1673 | 834 | S.முருகன் | 1000 |
| 1674 | | P.C.சண்முக சுந்தரம் | 1000 |
| 1675 | 386 | Dr.M.S.முத்துசாமி | 1000 |
| 1676 | | C.முத்துகுமார் | 1000 |
| | | | 72,48,936 |

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்கனவே செய்தி மடல் வாயிலாக பலமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள அடையாள அட்டை மாதிரி விண்ணப்பத்தில் தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து, இதுவரை சங்கத்திற்கு அனுப்பாதவர்கள், உடனே அனுப்பும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சங்கத்தின் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும், சங்கம் அளித்துவரும் சலுகைகளைப் பெறுவதற்கும் புதியதாக வழங்கப்படவுள்ள அடையாள அட்டை அவசியம் தேவைப்படும். எனவே இதுவரை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பாத உறுப்பினர்கள் இனியும் காலம் தாழ்த்தாது உடனே அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'தீரன் சின்னமலை மாளிகை' கட்டட நிதிக்கு இதுவரை ரூ. 1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்கள், உடனே அனுப்பிட அன்புடன் வேண்டுகிறோம். ரூ.1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதால், கட்டட நிதியை உடனே சங்கத்திற்கு அனுப்புமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

❖❖❖❖❖

## சங்கச் செய்தி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி மாற்றப்பட்டுள்ளது.

www.kongunanbargalsangam.com

உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தைப் பயன்படுத்தி சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம். 'கொங்கு நண்பர்கள் இதழ்' இந்த இணையதளத்தில் முழுமையாக வெளியிடப்படுகிறது. உலக முழுவதிலும் உள்ள கொங்குச் சொந்தங்கள் இதைப் படித்துப் பயன்பெறலாம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**
நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :
Name / பெயர் :
Father's Name / தகப்பனார் பெயர் :
Date of Birth / பிறந்த தேதி :
Edu. Qualification / கல்வித்தகுதி :
Occupation / தொழில் :
Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address<br>சொந்த ஊர் முகவரி | Present Address<br>தற்போதைய முகவரி | Office Address<br>அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number: E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name<br>உறுப்பினர் பெயர் | Date of Birth<br>பிறந்த தேதி | Relationship<br>உறவுமுறை | Education / Employment<br>படிப்பு / தொழில் | Blood Group<br>இரத்தப் பிரிவு | Land Line / Mobile<br>தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

# வாழ்த்துகிறோம்

மலேசியா நாமக்கல் மன்றத்தின் 56வது ஆண்டு பேராளர் மாநாடு 28–07–2012 அன்ற மலேசியா குவாந்தான்னில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர் திரு. பரணி கே.பாலசுப்பிரமணி சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டார்.




கொங்குச் சமுதாய முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபட்டு வருவதற்காகவும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அரும்பணியாற்றி வருவதற்காகவும், கொங்குச் சமுதாய இளைஞர்களுக்கும், மாணவ, மாணவியருக்கும் தேவையான ஆலோசனைகள் மற்றும் உதவிகளை ஓசையில்லாமல் செய்து வருவதற்காகவும் மலேசியா நாமக்கல் மன்றம் இந்த ஆண்டு நடைபெற்ற இந்தப் பேராளர் மாநாட்டில் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி அவர்களுக்கு ''பெருந்தலைவர்'' என்ற உயரிய விருதை வழங்கி கௌரவித்துள்ளது. இந்த விருதை மலேசியா காங்கிரசின் தேசிய தலைவரும், அமைச்சருமான மாண்புமிகு டத்தோ ஸ்ரீ ஜி.பழனிவேல் அவர்கள் வழங்கினார்.

இந்த மாநாட்டில் நாமக்கல் மன்ற தேசிய தலைவர் திரு.கருணாகரன், மன்ற நிர்வாகிகள், கொங்குச் சொந்தங்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். விருதைப் பெற்றுக்கொண்டு விழாவில் ஏற்புரை ஆற்றிய திரு.பரணி கே.பாலசுப்பிரமணி தமிழ்நாட்டில் கொங்கு வேளாளர் சமுதாயத்தினரின் இன்றைய நிலைபற்றியும், சமுதாய முன்னேற்றத்திற்கு ஆற்ற வேண்டிய செயல்கள் குறித்தும் உரையாற்றியதோடு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயல்பாடுகளையும், சாதனைகளையும் குறிப்பிட்டுப் பேசினார். மேற்கண்ட விழாவில் துணைத்தலைவர் திரு.பி.சென்னியப்பன், முன்னாள் தலைவர் திரு. அப்பாவு அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்துக்கொண்டனர்.

''பெருந்தலைவர்'' விருது பெற்று கொங்குச் சமுதாயத்திற்கும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கும் பெரும் பெருமை சேர்த்துள்ள திரு.பரணி கே.பாலசுப்பிரமணி அவர்களை வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

| | |
|---|---|
| கே.கே.ரமேஷ் | ஆர்.செல்வராஜ் |
| பொருளாளர் | செயலாளர் |

செயற்குழு உறுப்பனர்கள் மற்றும் சங்க நிர்வாகிகள்

❖❖❖❖❖

# அகவை 90ல் அருட்செல்வர் வாழ்த்தி வணங்குகிறோம்.



அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்கள் கொங்குநாடு தந்த கொடை. சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் முதல் தலைவராக 1968 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டுவரை பொறுப்பேற்று சங்கத்திற்குப் பெருமை சேர்த்தவர், அரசியல், தொழில், விவசாயம், இலக்கியம், அறிவியல், கல்வி, ஆன்மீகம் முதலான முக்கியத் துறைகள் அனைத்திலும் வியத்தகு சாதனைகள் பல புரிந்தவர். எண்ணற்ற பேர்களுக்கு பலவகையிலும் உதவிகள் புரிந்துள்ள இவர் சங்கத்தின் ''கொங்கு மாமேதை'' விருது பெற்றவர்.

தொலைநோக்குப் பார்வை கொண்டு நதிகள் இணைப்பைப் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருபவர். காந்தி, வள்ளலார் புகழ் பரப்பும் உயரிய பண்பாளர். 1952 முதல் 1967 வரை மூன்று முறை தமிழக சட்டமன்ற உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றியவர். கிராம நலம், பாசனவசதி, நதிநீர்த்திட்டம், கல்விக் கொள்கை, தொழில் வளர்ச்சி முதலானவை பற்றி தன்னுடைய கருத்துகளை சட்டமன்றத்தில் பதிவு செய்து தமிழக முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர். கொங்கு நாடு அறக்கட்டளையின் தலைவர். தமிழ்நாட்டிற்கு, குறிப்பாக கொங்கு நாட்டிற்குப் பெரும் பெருமை சேர்த்துள்ள இவர், இந்திய அரசின் 'பத்மபூஷன்' விருதைப் பெற்றவர். 40 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து சென்னையில் காந்தி வள்ளலார் விழாவை மிகச்சிறப்பாக நடத்தி வருகிறார்.

23–03–2012 அன்று 90 ஆம் ஆண்டில் காலடி வைத்துள்ள இவருக்கு 6/8/2012 அன்று மாலை சென்னை லீ ராயல் மெரிடியன் ஹோட்டலில் பி.ஜி.பி.குழும நிறுவனங்களின் தலைவர் கொங்குமாமணி டாக்டர் பழனி ஜி.பெரியசாமி அவர்கள், அருட்செல்வர் அவர்களின் 90 ஆம் ஆண்டு விழாவையொட்டி பாராட்டு விழாவை ஏற்பாடு செய்து மிகச்சிறப்பாக நடத்தினார். சென்னையில் உள்ள சமுதாயச் சான்றோர்கள் பலர் குடும்பத்துடன் விழாவில் கலந்துகொண்டனர். அருட்செல்வர் அவர்கள்மேல் பெருமதிப்பும்,

மரியாதையும், பாசமும் கொண்டுள்ள பி.ஜி.பி. அவர்கள், அருட்செல்வரின் சாதனைகளையும், அருங்குணங்களையும் எடுத்துரைத்து, **90** ஆம் ஆண்டு தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் அருட்செல்வர் அவர்களை கேக் வெட்டச் செய்ததுடன் விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் அறுசுவை உணவளித்து மகிழ்ந்தார்.

விழாவில் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன், மூத்த வழக்கறிஞர் திரு.இரா.காந்தி, ஜெம் குழும நிறுவனங்களின் தலைவர் திரு. ஆர்.வீரமணி, சவீதா பல்கலைக்கழக வேந்தர் டாக்டர். என்.எம்.வீரையன், உயர்நீதி மன்ற நீதிபதி திரு.ஜெயச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி, அருட்செல்வருக்குப் பாராட்டுத் தெரிவித்தனர். விழாவில் கொங்கு நாடு அறக்கட்டளை அறங்காவலர்கள் திரு. எம்.முருகேசன் திரு,எஸ்.அருணாசலம், திரு.கே.ஆர்.அப்பாவு, திரு. ராஜ்பார்க் பி.தேவராஜன், திரு.ஏ.கே.வெங்கடசாமி, செயலாளர் திரு. டி.கே.சுப்பிரமணியன், திரு.சக்தியமூர்த்தி IPS, திரு. சிவகுமார் IAS, திரு. ரவி IPS, திரு. ஆயிகவுண்டன், சக்தி சுகர்ஸ் டாக்டர் கே.பி.கணேசன், திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன், திரு. கே.ஏ.செங்கோட்டுவேல், லீ மெரிடியன் நிர்வாக இயக்குநர் சென்னிமலை, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத் துணைத்தலைவர் கே.ஏ.கணபதி, பொருளாளர் திரு.கே.கே.ரமேஷ், செயற்குழு உறுப்பினர்கள் திரு. ஆர்.சண்முகவேலு, கே.ராஜாமணி, முனைவர் மணிமேகலை புஷ்பராஜ், பி.கே.ஈஸ்வரமூர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் திரு.தேவராஜன், தணிக்கையாளர் திரு.ஆர்.பாலசந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அருட்செல்வர் அவர்கள் ஏற்புரை ஆற்றும்போது கொங்குச் சமுதாய முன்னோடிகள் ஒன்று சேர்ந்து சாதாரண மக்கள் குறைந்த விலையில், தரமான சாப்பாடு சாப்பிடும் வகையில் நெடுஞ்சாலைகளில் மோட்டல்கள் ஆரம்பிக்க வேண்டும் என்றும், கொங்குச் சமுதாயத்தின் சிற்பிகளை நினைவு கூர்ந்து அவர்களுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்றும், கொங்குச் சமுதாய இளைஞர்கள் மேன்மேலும் உழைத்து வாழ்க்கையில் உயர வேண்டும் என்றும் கூறினார்.

அகவை **90** ஐ எட்டி, நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் அரும்பணியாற்றி வரும் கொங்குமாமேதை அருட்செல்வர் அவர்கள் மேலும் பல்லாண்டு பல்லாண்டு நலமுடன் வாழ்ந்திட அருள்புரிய வேண்டும் என அருட்பெருஞ்ஜோதியின் தனிப்பெரும் கருணையை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இறைஞ்சி கேட்டுக்கொள்கிறது.

❖❖❖❖❖

# பாராட்டுகிறோம்

KVIT அறக்கட்டளை
கொங்கு பொறியியல் கல்லூரி, பெருந்துறை

கொங்கு வேளாளர் தொழில் நுட்பக் கல்லூரி அறக்கட்டளையால் நடத்தப்பட்டு வரும் கொங்கு பொறியியல் கல்லூரி 25 ஆண்டுகளைக் கடந்து மிகச்சிறப்பாகக் கல்விப் பணியாற்றி வருகிறது. தன்னாட்சி அதிகாரம் பெற்ற இந்தக் கல்லூரியில் தற்போது 7000 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இக்கல்லூரி அகில இந்திய அளவில் Outlook பத்திரிகையின் தரவரிசைப் பட்டியலில் 54 ஆவது இடமும், Competition Success Review பத்திரிகை தரவரிசைப் பட்டியலில் 35 ஆவது இடமும் பெற்றுச் சாதனை படைத்துள்ளது. தமிழக அளவில் தனியார் பொறியியல் கல்லூரிகளுள் மிகச்சிறந்த கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்கின்றது.

கிராமப்புற மாணவர்களுக்கு உலகத் தரமான தொழிற்கல்வி குறைந்த கட்டணத்தில் கிடைக்க வேண்டும் என்ற உயரிய இலட்சியத்துடன் கொடையுள்ளமும், மனிதநேயமும், சேவை மனப்பான்மையும் கொண்ட கொங்குச் சமுதாயப் பெருமக்களால் தொடங்கப்பட்டு, மிகச்சிறப்பாக நடத்தப்பட்டு வரும் இக்கல்லூரியில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் அதிக மதிப்பெண்கள் பெறும் ஐந்து சதவீத மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2012–2013 ஆம் ஆண்டு முதல் இனி ஒவ்வோராண்டும் கொங்கு வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்த 25 மாணவர்களுக்கு இக்கல்லூரியில் கல்விக்கட்டணம் ஏதுமில்லாமல் இலவசக்கல்வி அளிக்க முடிவெடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. நிர்வாக ஒதுக்கீட்டில் நிரப்பப்படும் இந்த இடங்களுக்கு, கீழ்க்கண்டவாறு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

1. கொங்கு வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
2. +2 தேர்வை தமிழ்நாட்டில் உள்ள அரசு அல்லது மாநகராட்சி அல்லது நகராட்சிப் பள்ளிகளில் படித்து தேர்வு பெற்றிருக்க வேண்டும். அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் படித்து +2 தேர்வு எழுதும் மாணவர்கள் இத்திட்டத்தில் பரிசீலிக்கப்படமாட்டார்கள்.
3. விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து தேவையான சான்றுகளுடன் குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்பியிருக்க வேண்டும்.

4. மேற்கண்ட மூன்று நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து விண்ணப்பித்த மாணவர்களுள் மதிப்பெண்கள் அடிப்படையில் முதல் 25 மாணவர்கள் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுவர்.

மிகவும் சிறப்பு வாய்ந்த இந்தத் திட்டத்தினை இந்த ஆண்டு முதல் அமுல்படுத்தியிக்கும் KVIT அறக்கட்டளை, கொங்கு பொறியியல் கல்லூரி, குறிப்பாக அறக்கட்டளை தலைவர் திரு. NSIT M.முருகேசன், செயலாளர் பி.சத்தியமூர்த்தி, பொருளாளர் கே.பழனிசாமி, கல்லூரி தாளாளர் திரு. ஆர்.கே.விஸ்வநாதன் மற்றும் அனைத்து அறக்கட்டளை உறுப்பினர்களுக்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது. ஏற்கனவே கொங்கு வேளாளர் சங்கங்கள் கூட்டமைப்பிற்கு மூன்று இடங்கள் (ஒற்றைச் சாளரை மூலம் இக்கல்லூரிக்கு வரும் மாணவர்களுக்கு இலவசக்கல்வி) தரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சமுதாயப்பணியும், கல்விப்பணியும் பிணைந்துள்ள இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ள KVIT அறக்கட்டளை, மேன்மேலும் சாதனைகள் பல புரிந்து விரைவில் ஒரு பல்கலைக்கழகமாக உயர்வு பெற்று சிறப்புப் பெறவேண்டும் என சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

## வருந்துகிறோம்

ஈரோடு மாவட்டம் பாலதொழுவு காசிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த அமரர் கே.எஸ்.இராமசாமி கவுண்டர் அவர்களின் மனைவி திருமதி சுப்புலட்சுமி (எ) சின்னபாப்பு அவர்கள் 30–07–2012 அன்று தன்னுடைய 72 வது வயதில் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.



திருமதி சுப்புலட்சுமி அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது மகன்கள் கே.ஆர்.அசோக்குமார், திரு.கே.ஆர்.செல்வகுமார் மற்றும் குடும்பத்தார்க்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. இறைவனடி சேர்ந்துவிட்ட அம்மையாருடைய ஆன்மா சாந்தியடைய சங்கம் பிரார்த்திக்கிறது.

❖❖❖❖❖

# திருச்செங்கோடு காளியண்ண கவுண்டர் பாராளுமன்ற விழாவில் புறக்கணிப்பு

– ஈ.ஆர்.ஈஸ்வரன்
முன்னாள் செயலாளர்

இந்தியத் திருநாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரே மூத்த பாராளுமன்ற உறுப்பினர் கொங்கு மண்ணின் தூய்மைச் சின்னம் ஐயா, டி.எம். காளியண்ண கவுண்டர் அவர்கள். பாராளுமன்றத்தின் 60வது ஆண்டு விழாவில் கௌரவிக்கப்படாதது மட்டுமல்ல, அந்த விழாவுக்கு அழைக்கப்படவும் இல்லை. கொங்கு மண்ணின் வித்துக்கள் அனைவரும் இச்செயலை பெருத்த அவமானமாகக் கருதுகிறோம். இதுவே ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இப்படி அவமானப்படுத்தப்பட்டிருந்தால் இந்திய நாடே கொந்தளித்திருக்கும். இந்த அவமானத்திற்கு அவர் கவுண்டராகப் பிறந்ததுதான் குற்றமா ?

பத்திரிக்கைகளில் செய்தி வந்த பின் கூட அவர் சார்ந்த காங்கிரஸ் இயக்கம் இதைப்பற்றிக் கவலைப்படவில்லை எந்த ஒரு தேசியக் கட்சியும் இதைப்பற்றிப் பேசவில்லை. மாநிலக்கட்சிகள், ஒரு தமிழனுக்கு இழைக்கப்பட்ட துரோகத்தைக் கண்டு கொள்ளவே இல்லை. இது தான் தமிழினத்தை காக்கும் லட்சணமா ? இதை நம்பி தமிழ் பேசும் தமிழர்கள் ஏமாற வேண்டுமா ?

இந்த நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கும்போது சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. பாராளுமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. சட்டங்களை இயற்றுகின்ற, திட்டங்களைத் தீட்டுகின்ற அந்தச் சபைகளில் இந்தக் கொங்கு வேளாளன் பட்ட அவமானத்தைப்பற்றி பேச ஆளில்லை. இந்தியா சுதந்திரமடைந்து 65 ஆண்டுகளாகியும் உயர்ந்த சபைகளிலே நாம் அனாதையாக இருக்கின்றோம் என்ற உணர்வு அடிமைத்தனத்தை பறைசாற்றுகிறது.

இதுவே ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தவருக்கு நேர்ந்திருந்தால், கட்சிப் பாகுபாடு பார்க்காமல் அந்தச் சமுதாயமே ஒற்றுமைப்பட்டு சபைகளை நடத்தவிடாமல்

செய்திருப்பார்கள். அவர்கள் ஒற்றுமைப்படுவதை நான் குறை கூறவில்லை. நம் சமுதாயம் அப்படியில்லையே என்பதை நினைத்து வேதனைப்படுகிறேன். பொறாமை தான்.

மற்றவர்களுக்கு அரசியலா, சமுதாயமா என்ற கேள்வி வரும் போது சமுதாயம் தான் என்பதில் தெளிவாக இருக்கிறார்கள். ஆனால் கொங்கு வேளாளர் அரசியலா, சமுதாயமா என்ற போட்டி வரும்போது அரசியலுக்காக சமுதாயத்தை விட்டுக்கொடுக்கின்றானே என்ற வேதனைதான் நம்மை அவமானப்படுத்துகிறது.

கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவைத் தலைவர் கோவை செழியன் தலைமையில் வலிமை பெற்ற பின்தான் நம்மால் தீரன் சின்னமலையை வெளிக்கொணர முடிந்தது. தீரன் சின்னமலை சுதந்திரப்போராட்ட வீரன்தான். இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக தன் சகோதரர்களோடு சேர்ந்து உயிரை சங்ககிரி மலையில் தியாகம் செய்தவன்தான். ஆனால் யார் கண்டு கொண்டார்கள் ?

கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கமும் தொடர்ந்து அடையாளப்படுத்தியால் இன்றைக்கு கொங்கு வேளாளர் சமுதயாத்தைப் பகைத்துக்கொள்ளக்கூடாது என்று அனைத்துக் கட்சிகளும் தீரனின் புகழ் பாடுகிறார்கள்.

தீரன் சின்னமலை சாதி பார்த்தவன் அல்ல. ஆனால் சாதி பார்க்காமல் எந்த அரசாங்கம் தானாக முன்வந்து சின்னமலைக்குப் புகழ் சேர்த்தது ? நம் பாட்டனைப் புறக்கணிக்கிறார்களே என்று இந்தக் கொங்கு சமுதாயம் தானே முன்னின்று நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதே போலத்தான், ஐயா திருச்செங்கோடு காளியண்ண கவுண்டர் அவர்கள் இது நாள் வரைக்கும் சாதி பார்த்து நடந்து கொண்டதில்லை. ஒரு தூய காங்கிரஸ்காரனாக நடந்து கொண்டிருக்கிறார்.

அந்த காங்கிரஸ் ஆட்சி தலைமையில் நடத்துகின்ற மத்திய அரசாங்கம் அவருடைய நேர்மையை, நாணயத்தை, மதச்சார்பற்ற தன்மையை சாதிக்கு அப்பாற்பட்ட அவர் எண்ணங்களை மதித்ததா ? பல அரசியல் கட்சிகளில் இன்றைக்கு

அதிகாரத்திலிருக்கின்ற கொங்கு வேளாளர்கள், நடந்த அவமானத்தைப்பற்றிக் கவலைப்பட்டார்களா ? ஆனால் நம்மால் பொறுத்தக்கொள்ள முடியாமல் பொறுமுகிறோமே! அவருக்கு நேர்ந்த அவமானத்தை ஒவ்வொரு கொங்கு வேளாளனுக்கும் நடந்தது போல துடிக்கிறோமே! எத்தனை ஆயிரம் தொலைபேசி அழைப்புகள் நம் சொந்தங்களிடமிருந்து. ஐயா, காளியண்ண கவுண்டரைத் தனிப்பட்ட முறையில் அறிந்தவர்களா ? கிடையாதே! கிடையாதே! நம்முடைய கொங்கு ரத்தம் என்ற உணர்வுதானே!

கொங்குச் சொந்தங்கள் எந்தக் கட்சியில், எவ்வளவு பெரிய பதவியில் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு அவமானமென்றால் தனக்கேற்பட்டதுபோல் துடித்துப் போவது நம் ரத்தம்தான் என்ற உண்மையை யாரும் மறக்கக்கூடாது.

தீரன் சின்னமலையின் புகழை, காளிங்கராயனின் புகழை வெளிக்கொணர்ந்தது போல, ஐயா திருச்செங்கோடு டி.எம்.காளியண்ண கவுண்டரின் தியாகங்களையும் வெளிக்கொணர உறுதி கொள்வோம்.

இப்படிக்கு
ஈ.ஆர்.ஈஸ்வரன்
முன்னாள் துணைத்தலைவர்
கொங்கு நண்பர்கள் சங்கம்

**காளியண்ண கவுண்டர் அவர்கள் பற்றிய குறிப்பு**

| | | |
|---|---|---|
| பெயர் | : | டி.எம்.காளியண்ண கவுண்டர் |
| | | Ex.M.P., Ex.MLA., Ex MLC., Ex. ஜில்லா போர்டு தலைவர் |
| | | Ex.இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினர் |
| வயது | : | 92 |
| பிறந்த ஊர் | : | திருச்செங்கோடு, குமாரமங்களம் |

தந்தை பெயர் : சின்னபரமசாமிக் கவுண்டர்

பதவிக்காலம் : 1952 ஆம் ஆண்டு இராசிபுரம் (MLA) சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

1957 மற்றும் 1962 ஆம் ஆண்டுகளில் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பிராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

. சட்டமன்ற மேலவை உறுப்பினராக 1973 மற்றும் 1979 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

. பிரதமர் ஜவஹர்லால் நேரு, டாக்டர் அம்பேத்கார் ஆகியோருடன் அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக இருந்தார்.

சாதனைகள் : இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் போது (1) ஒரே வருடத்தில் சேலம் மாவட்டத்தில், கல்வியறிவை மேம்படுத்த 1000 பள்ளிக்கூடங்களைத் திறந்து மாபெரும் சாதனை புரிந்தார்.

. இவரது காலத்தில்தான், ஈரோடு மாவட்டத்திலுள்ள பவானி பாலம் மற்றும் தற்போது நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலைக்கு சாலையும் முதன்முதலாக போடப்பட்டது.

மேலும் தமிழ் மொழி மீது அளவற்ற பற்றுக்கொண்ட இவர், நமது மொழியை வளர்க்கவும் மற்றும் நமது தமிழ் மூதாதையர்களான ஔவையார், இளங்கோவடிகள் இவர்களுக்கு நினைவாலையம் அமைக்கவும், கண்ணகிக்குக் கோவில் அமைக்கவும் தொடர்ந்து தமிழக அரசுக்குக் கோரிக்கை வைத்துக்கொண்டு வருகிறார்.

தொடர்ந்து 40 ஆண்டுகளாக திருச்செங்கோட்டில் கண்ணகிவிழா நடைபெறுவதில் முக்கியப் பங்கு வகித்தார். தமிழ்நாட்டில் கண்ணகி விழா நடைபெறும் இடம் திருச்செங்கோடு மட்டும்தான். கண்ணகி மறைந்த இடம் திருச்செங்கோடு என்றும் வலியுறுத்தி வந்துள்ளார்.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்

தமிழ்நாடு பேப்பர் லிமிடெட் (TNPL) நிறுவனத்தில் உதவிப் பொது மேலாளராகப் பணியாற்றி வரும் திரு.எஸ்.சுப்பிரமணியம் அவர்கள் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 27வது பட்டமளிப்பு விழாவில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். மாநில ஆளுநரும், பல்கலைக்கழக வேந்தருமான உயர்திரு. மாநில ஆளுனரும், ரோசய்யா அவர்கள் டாக்டர் பட்டத்தை வழங்கினார். தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சரும் இணைவேந்தருமான திரு.பி.பழனியப்பன் அவர்களும், பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. சாமிநாதன் அவர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.



டாக்டர் பட்டம் பெற்றுள்ள திரு. எஸ்.சுப்பிரமணியம் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்

நமது சங்க உறுப்பினரும், தமிழக அரசில் தொழிலாளர் இணை ஆணையராகப் பணியாற்றி வருபவருமான திரு.ப.மாரிமுத்து அவர்களின் மகன் மா.சித்தார்த். இவர் Indian Institute of Management (IIM) Ahamedabad ல் இரண்டு வருட முதுநிலை பட்டப்படிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த ஆண்டு 2012 ஜீன் மாதம் முதல் அங்குப் பயின்று வருகிறார். இந்திய அளவில் புகழ் பெற்றுள்ள IIM Ahemedabad ல் சேர்வது ஒரு சாதனையென்றே கூறலாம்.

இவர் 2006 ஆம் ஆண்டு நடந்த நமது சங்கத்தின் குடும்ப விழாவில் 12ம் வகுப்பில் 1172/1200 மதிப்பெண் பெற்றதற்காக முதல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்ற கூற்றுக்கிணங்க, IIM ல் இடம் கிடைத்து நமது சமுதாய மாணவர்களுக்கு ஒரு முன்னோடியாகவும், நம்பிக்கை நட்சத்திரமாகவும், வழிகாட்டியாகவும் திகழ்கின்ற செல்வன் மா.சித்தார்த் அவர்களை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டுவதோடு, இனி வரும் ஆண்டுகளில் மேலும் பல சாதனைகள் புரிய வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

# உணவே மருந்து - அன்றும் இன்றும்

முனைவர் களிமேடு கா.இலட்சுமணன், கோவை

நமது முன்னோர்கள் உணவு தயாரித்தல், உண்ணுதல் போன்றவற்றில் கட்டுப்பாட்டுடனிருந்து ஆரோக்கியத்தைப் பேணிக் காத்தனர். பெரும் நோய்களாம் காசம் குட்டம் போன்றவற்றிற்கும் கிராமிய மருத்துவர் (பண்டிதர்) களையே நாடினார். இன்றும் கூட நாகரீக மருத்துவம் (அலோபதி) பெரும்பாலான மக்கள் வாழும் கிராமங்களுக்குள் நுழையவில்லையே ?

வீட்டினுள் நுழையும் பொழுதே, வாசலில் அண்டாவிலுள்ள தண்ணீரை பித்தளைச் சொம்பிலெடுத்து கைகால்களைக் கழுவிக்கொண்டுதான் உள்ளே வருவர். இன்று "உங்கள் குழந்தையைக் காக்க கைகளைக் கழுவிக்கொண்டு உள்ளே வாருங்களென" இங்கிலாந்து பிரசவ மருத்துவமனை அறிவிப்புப் பலகைகள் அறிவுரை கூறுகின்றன. அன்றும் இன்றும்.

உணவு மாத்திரமல்ல, அதைத் தயாரிக்கும் பாத்திரங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். உணவு தயாரிக்க பித்தளை, மண்பாத்திரங்கள், இரும்புச் சட்டிகள் பயன்படுத்தப்பட்டன. ஓடிக்கொண்டே இன்று உட்கொள்ளும் சாண்ட்விட்ச், பர்கருக்கு இலக்கணமேது ? இத்தகைய உணவு முறைகளாலும், சுற்றுச்சூழல் தூய்மையறியாத நிலைகளாலும் இந்தியா உலக சுகாதாரத்தின் பேராபத்து (India the Global Health Disaster) என்று வர்ணிக்கப்படுகிறது. இதோ சில :

. புற்றுநோயால் அவதிப்படுவோர் 2.5 இலட்சம். இதில் பசுமைப்புரட்சி, மரபணுமாற்ற பிடி–பருத்திகளின் உபயம் பிரதானம். 2020க்குள் இது நான்கு மடங்காகும். மார்பகப்புற்றுநோய் கடந்த கால் நூற்றாண்டில் இரு மடங்காகியுள்ளது.

. சர்க்கரை நோயின் உலகத் தலைநகர் இந்தியாவே என்று வர்ணிக்கப்படுகிறது.

. 2006 ஆம் ஆண்டில் தொழுநோய் ஒழிந்ததென விழா எடுத்தோம். ஜீலை 2010–2011 காலகட்டத்தில் 1,26,800 நோயாளிகள்–உலகிலேயே இந்தியா முதன்மையாக உள்ளது.

HIV/AIDS ல் இந்தியா இரண்டாம் இடமே பெறுமுடிந்தது. குடல் இரைப்பை சார்ந்த (Gastro intestinal) உபாதையால் தினமும் 150 பேர் பாரதத்தில் மடிகின்றனர். எலும்புருக்கி

நோயால் 2.25 மில்லியன் இந்தியர்கள் அவதிப்படுவதாக உலகச் சுகாதாரக்கழகம் (2011) கூறிச்செல்கிறது.

ஏழ்மை நாடான இந்தியாவில் கொழுஉடலால் (Obesity) எல்லா வயதினரும் வேகமாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

2009 ஆண்டில் உலகிலேயே உயர்ந்த அளவு சிசு மரணம் இந்தியாவில் நிகழ்ந்தன. பிரவச வசதியின்மை, ஊட்டக்குறையால் (Malnutrition) மரணம் நிகழ்கின்றன. 65 ஆண்டுகள் சுதந்திர மடைந்த பின்னரும் சிறந்த மருத்துவமுறையின்மை, குறைபோஷாக்கு போன்றவை தவிர வெறி நாய்க்கடியால் ஆண்டுக்கு 20000 பேர் சாகின்றனர்.

இன்றும் மக்கள் பசுமை உணவு, நடைப்பயிற்சி யென்று கட்டுப்பாட்டுடனிருந்தாலும் உணவுமுறை, உணவில் விஷத்தன்மை மக்களைப் பெரிதும் பாதிக்கின்றது. இன்றைய நிலைக்கு மாறாக அன்று, கண்ணுக்குப் பொன்னாங்கண்ணி, ஞாபக சக்திற்கு வெண்டை, பல்லுக்கு கரிசிலாங்கண்ணி, உற்சாகம் பெருக வாழைப்பழம் ,நரம்பு நோய்க்கு சோயா, நரம்பு தளர்ச்சிக்கு அவரை, கொழுப்புக்கு எதிரி வெங்காயம், தூக்கமின்மைக்கு ஜாதிக்காய், சேமியா கஞ்சி, பசியெடுக்க பிரண்டை, வெள்ளைப்போக்கிற்கு அகத்தி, பூப்படைய கருஞ்சீரகம், கர்ப்பிணிக்கு மாதுளை, கர்ப்பப்பை கட்டிக்குப் பப்பாளி, மார்பக வளர்ச்சிக்கு தேங்காய் தாய்ப்பால் சுரக்க முருங்கைக்கீரை.

எனவே இரசாயனப் பொருட்கள் இடப்படாத பயன்படுத்தப்படாத பழங்கள், மீன்வகைகளைத் தேர்ந்தெடுத்து உண்ண வேண்டும். இதேபோல கொசு ஒரு சிறிய ராட்சஷன், கோவை, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் ஜனவரி–ஜீன் வரை டெங்கு மலேரியா நோய்கள் பரவுமிடங்களாகும். தெரிந்தும் 2, 3 பேர் உயிரைக்கொடுத்து தான் சுகாதாரத் துறையைத் தட்டியெழுப்ப வேண்டியுள்ளது. ஆனால் அன்று

சோற்றுக் காற்றாழையை (Aloe Vera) உள் கூரையில் செருகி கொசுவை விரட்டவர். துளசிச்செடியின் கிளைகளை கசக்கி வீட்டினுள் வைப்பர். இன்று வரவேற்பறையில் வைக்கும் அழகு பூக்குவளையிலுள்ள நீரே கொசு உற்பத்தியிடம். அதில் ஒரு துளசிக்கொத்தை வைக்கலாமே! மாலை வேளைகளில் விளக்கெண்ணை விளக்கில் 2,3 துளி வேப்பெண்ணை விட்டு வீட்டில் வைத்தால் கொசு வராது. எனினும் டெங்கு கொசு

பகலில் வரும் இன்று வாசக்காற்று (Air Freshner) என்னென்ன, வகைப்பொருட்கள். ஓர் ஆய்வுக் கட்டுரை The Study sheds light on the increasing risk of cardiac disorders as a result of constant exposures to indoor volatile irritants கூறுகிறது. கொசுச்சுருளில் 137 சிகரெட் புகையின் நச்சுகளுள்ளனவென்கிறது சீன ஆய்வு. மேலும் கம்பெனிகளின் அறிவுரையையும் மீறி எல்லா ஜன்னல்களையும் மூடுகிறோம். இதில் நிக்கோடின் இல்லையென்று கம்பெனி கூறும்.

இந்திய அரசோ, விஞ்ஞானிகளோ அந்நிறுவனங்களுக்கு ஆதரவாக மௌனம் சாதிப்பர். மக்களுக்கு ஈ.ரல் சுவாசப்பை பாதிக்கப்படுவதையும், அஸெட்டால்டி ஹைடு மற்றும் ஃபார்மல் டி ஹைடு, பென்சீன் டொலூரயின் உள்ளதையும் விளக்கிக் கூறுவோர் யார் ? சோப், கொசு எதிர்ப்புப் பொருட்கள், பானகங்கள் ஆகியவற்றில் 'new' என்று வந்தால் நஞ்சை அதிகம் சேர்த்துள்ளோம் எனப் பொருள்கொள்க.

தினமும் ஒரு ஆப்பிள், நெல்லிக்கனி சாப்பிட்டால் மருத்துவரே வேண்டாமென்பது அன்றைய அறிவுரை. ஒரு ஐரோப்பிய ஏடு கூறுகிறது. ஒரு ஆப்பிளில் 7 2 வகை பூச்சிக்கொல்லி மருந்துகளுள்ளனவென்று. நம் நாட்டில் பழங்கள் இரசாயனப்பொருட்கள் கொண்டு பழுக்க வைக்கப்படுகின்றன. பளபளப்பு விஷம், மீனின் மீது ஃபார்மல் டிவைடு ! எதைத்தான் இன்று சாப்பிடுவது ? தமிழகத்தில் 25–29 வயதினர் நடைப்பயிற்சி உணவில் கட்டுப்பாடுடன் இருந்தாலும், எடை குறையாததற்கு இந்த இரசாயனப் பொருட்களே காரணமாகும்.

அதேபோலத்தான் கருத்தடை முறைகளும். அன்று உணவு, மூலிகை, பாட்டி வைத்தியம் கொண்டு Contraceptive Chaos இன்றி அமைதியாகக் கையாளப்பட்டது.

முடிந்தவரை சில காய்கறிகளை இயற்கை முறையில் உற்பத்தி செய்யலாம் மேல்மாடித்தோட்டம் பிரபலமாகி வருகிறது. பல கனி, காய்கறிகளில் தோலின் முக்கியத்துவம் பற்றிக்கூறி வந்தோம். இன்று அவை விஷமாக்கப்பட்டு விட்டது. முடிந்தவரை காய்களை உப்புக்கல் கலந்த நீரில் ஊறவைத்து கழுவி சமைக்கலாம்.

தொடரும்....

❖❖❖❖❖

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : ஆர்.கே.மணிமொழியன் |
| பிறந்த தேதி | : 16-09-1982 |
| பிறந்த நேரம் | : மாலை **05.06** |
| பிறந்த இடம் | : கோயம்புத்தூர் |
| ஊர் | : பீளமேடு |
| தந்தை பெயர் | : Dr.பி.ஆர்.கந்தசாமி Ph.D.<br>Professor and Head in Engineering College |
| தாயார் பெயர் | : கலையரசி B.Sc., B.Ed., |
| உடன் பிறப்பு | : சகோதரி **1** (Software Engineer) |
| கல்வி | : B.E., (EEE) MS (USA) |
| தொழில் | : Software Engineer, Microsoft Company, California, USA |
| பூர்வீகம் | : நாமக்கல் உயரம் : 5'8' |
| நிறம் | : சிவப்பு |
| குலம் | : பெருங்குடி கூட்டம் |
| கோயில் | : வாங்கலம்மன் வாங்கல் (கரூர்) |

**தமிழ்தேதி – துந்துபி வருஷம் ஆவணி மாதம் 31ந் தேதி (16–09–1982) வியாழக்கிழமை மாலை பூரம் நட்சத்திரம் பாதம் 1 கும்ப லக்னம் சிம்ம ராசி யில் சுபயோக சுபதினத்தில் ஜாதகர் ஜெனனம்.**

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| ல | இராசி | | |
| | | | சந்<br>சூ / சுக் |
| கே | செ<br>மாந்தி | குரு | புத<br>சனி |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| ராகு<br>வி | நவாம்சம் | | |
| | | | சந் / புத<br>செ / கேது |
| லக்<br>சூரி | | | சுக்<br>சனி |

**ஜனன கால இருப்பு திசை : சுக்கிரன் மகாதிரை 15 வருடம் 7 மாதம் 20 நாள்**

Contact Address :
P.R.Kandasamy, 12, Anna Nagar
Backside, Pillaiyarkoil Peelamedu, Coimbatore - 641004
Cel : 98435 58487, 9488441289

❖❖❖❖❖

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : குழந்தைவேல் B.E |
| பிறந்த தேதி | : 29-09-1982, புதன் 9.20 p.m. |
| இராசி | : கும்பம் |
| நட்சத்திரம் | : அவிட்டம் 3ம் பாதம் |
| லக்னம் | : ரிஷபம் 7ல் செவ்வாய், 2ல் ராகு, 8ல் கேது |
| நிறம், உயரம் | : சிவப்பு, 5.5 அடி |
| தொழில் | : Software Engineer<br>Qualcom Company, California State, USA |
| வருமானம் | : 1 லட்சம் டாலர் வருடத்திற்கு |
| குலம் | : கண்ணகுலம், காளமங்கலம் குல விளக்கம்மன் கோவில் |
| தந்தை தாயார் பெயர் | : K.பழனிச்சாமி, செல்லம்மாள் |
| முகவரி | : 185C/11, மேட்டுப்பட்டி (கும்மிச்சம்பட்டி)<br>ஒட்டன்சத்திரம் (tk) திண்டுக்கல் Dt |
| ரத்த வகை | : O +ve |
| எதிர்பார்ப்பு | : B.E., B-Tech., / MCA / M.Sc., (IT) படித்த பெண் தேவை |
| தொலைபேசி | : 9788740285, 04553, 244110 |

| | | | |
|---|---|---|---|
| | | ல | ரா |
| சந் | இராசி | | |
| | | | |
| கே | செ | குரு | சூபு சுச |

| | | | |
|---|---|---|---|
| | சூ குரு | | |
| ரா சு | அம்சம் | | |
| | | | சனி கே |
| ல பு | செ | சந் | |

செவ்வாய் திசை இருப்பு 2 வருடம் 4 மாதம் 24 நாள்

❖❖❖❖❖

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : பி.கோகுலகிருஷ்ணன் |
| பிறந்த தேதி | : 22–09–1981 செவ்வாய் |
| பிறந்த நேரம், இடம் | : 14.19 IST, ஈரோடு |
| நட்சத்திரம் | : புணர் பூசம் (பாதம் 2), ராசி : மிதுனம், லக்கனம் : மகரம் |
| தந்தை பெயர் | : கே.என்.பாலசுப்பிரமணியன் |
| தாயார் பெயர் | : திலகவதி |
| தந்தை தொழில் | : Textile Export Business |
| உடன் பிறப்பு | : 1 அக்கா டாக்டர், ஆஸ்திரேலியா, திருமணமானவர்; மாப்பிள்ளை – டாக்டர் |
| கல்வி | : M.Sc., International Business, London, (UK), MA., (Marketing) (UK) |
| தொழில் | : Own Textile Export Business, Karur |
| வருவாய் | : மாதம் சுமார் Rs. 2,50,000/- |
| உயரம் / நிறம் | : 5.6 அடி, நல்லசிவப்பு |
| குலம் / கோவில் | : புலியூர் பெருங்குடி குலம், புலியூர் ஸ்ரீ முச்சிலியம்மன், ஸ்ரீ காளியம்மன் |
| சொத்து | : பங்களா, பூமி, வங்கி வைப்பு நிதி – முதலியன ரூ. 10 கோடி |
| எதிர்பார்ப்பு | : நல்ல பாரம்பரியமான குடும்பப் பின்னணி, நன்கு படித்த குணவதியான குடும்பப் பாங்கான பெண். |

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி | | செ ரா |
| லக் கே | | | |
| | | புத சுக் | சூரி குரு, சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சந் | சனி |
| சூரி கே | நவாம்சம் | | குரு |
| லக் | | | ரா |
| செ | | புத | |

தொடர்புக்கு :
தந்தை : கே.என்.பாலசுப்பிரமணியன் செல் : 98430 79736
தாய் : திலகவதி செல் : 9047034549

❖❖❖❖❖